# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 8488/F/2023

திரு.சொ.சண்முகவேல், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, -- பொது அதிகார அமைப்பு
தூத்துக்குடி மாவட்டம்-628 002.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், திரு.வெங்கட்ராமன், உதவி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.பாலசுந்தரம், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்-628 002 ஆகியோர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, தனது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார காலஅவகாசம் கோரினார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார கால அவகாசம் வழங்கியது.

2. அதனை தொடர்ந்து, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.பாலசுந்தரம், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்-628 002 (தற்போது

உதவி ஆணையாளர், திருநெல்வேலி மாவட்டம்) அவர்கள் 14.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, தனது எழுத்துமூல விளக்கத்தில், திரு.சண்முகவேல் என்பவருக்கு ந.க.எண்.சி3/3506/2023, கி.ம கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு 20.09.2023 அன்று பதிலறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும், இப்பொருள் தொடர்பாக 22.11.2024 அன்று பொது தகவல் அலுவலரால் மீண்டும் பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவினை பிரிவு எழுத்தர் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வராத காரணத்தினால் உரிய காலத்தில் பதில் வழங்க இயலவில்லை என்றும், இப்பொருள் தொடர்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலராகிய தான் 16.11.2023 அன்றுடன் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டதாலும், அடுத்து வரும் பொதுத் தகவல் அலுவலர்களால் பிரிவு வாரியாக தகவல் பெற்று உரிய காலத்திற்குள் பதில் வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் விளக்கத்தினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, ஆணையம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

1. **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறு பொது அதிகார அமைப்பிற்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ரசீதை பொதுத் தகவல் அலுவலர் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.ரா.ரமேஷ், கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, ந.க.எண்.சி5/5506/2022/கி.ம, நாள் 24.08.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)-யினை வங்கி வரைவோலையில் வழங்கப்பட்டதற்கான வங்கிவரைவோலையின் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8488/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்-628 002.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திரு.பாலசுந்தரம்,**
**கணக்கு அலுவலர்,**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (20.12.2022 தேதிய),**
**தூத்துக்குடி மாநகராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.சொ.சண்முகவேல்,
18/115 பிள்ளையார் கோவில் தெரு,
திம்மராஜபுரம்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம் -627 353.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, நகர்ப்புற நிர்வாகக் கட்டிடம்,
சாந்தோம் உயர்சாலை,
MRC நகர், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).

Copy to: File NS/PA-